தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 124

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: ஐப்பசி 21வ வெள்ளி (6—11—53) ★ ★ ★ வெளியூர்: ஐப்பசி 22வ சனி (7—11—53)

கருணாநிதி 'மோட்டார் கார்' ஜப்தி!

—(:)—

ரூ. 35 அபராதத் தொகையை வசூலிக்க ரூ. 10,000 பெறுமானமுள்ள கார் பறிமுதல்

'யாவனக்கும் பாவனக்கும் சரியாய்ப் போச்சு' என்ற ஆசியலார் அக்கிரமப் போக்கு

அபராதத் தொகையை நல்லவர் செலுத்தி 'காரை' மீட்டார்

திருச்சி, நவ. 6—

டால்மியாபுர பெயர் மாற்றக் கிளர்ச்சிப் போராட்டத்தில் தலைமையேற்ற தோழர் மு. கருணாநிதிக்கு, 5 மாதக் கடுங்காவல் தண்டனையும், 35 ரூபாய் அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் ஒரு மாதம் வெறுங்காவலும் விதிக்கப்பட்டிருந்தது. திடீரென அபராதப் பணத்தை வசூல் செய்ய அரியலூர் மாஜிஸ்திரேட் வாரண்ட் பிறப்பித்து, அவருடைய பத்தாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள காரை, 35 ரூபாய்க்காக ஜப்தி செய்தனர்.

மேற்கண்ட தொகையை, இந்த நடவடிக்கையின் மூலம் பலவந்தமாகப் பெற்றுக்கொண்ட பிறகு, கார் ஏலம் போடுவதினின்றும் தப்புவித்து, திரும்பக் கொடுக்கப்பட்டது.

தோழர் கருணாநிதி திருச்சி மத்திய சிறையில் அடைபட்டிருப்பது வாசகர்கள் அறிந்ததே. (ந.நி.)

இவ்வாண்டில்......

இவ்வாண்டில், இதுவரை, 16.14 650 டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது; இதில், 12 42 200 டன் அரிசி; 2.12,750 டன் சோளம்.

சென்ற ஆண்டில் கொள் முதல் செய்யப்பட்ட அளவு 32 91 500 டன்கள்; இதில், 18 37 200 டன் அரிசி; 8 92.000 டன் சோளம்; மற்றவை இதர தானியங்கள்.

க்ஷயரோகம்:

இந்தியாவில் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிகமாம்!

பம்பாய், நவ. 6—

"இந்தியாவில், க்ஷயரோகத்தினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை, மிக அதிகம்," என்று உலக சுகாதார நிலையத்தைச் சேர்ந்த சீனியர் ஆலோசகர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"இந்தியாவில், இந்த வியாதி காணும் 1,00,000 பேர்களில் 350 பேர்கள் மரணமடைகின்றனர்; டென்மார்க்கில், இந்த வியாதிக்குப் பலியாகும் நபர்களின் தொகை 1,00,000-க்கு 9 பேர்கள்தான்."

பாட்னா க்ஷயரோக நிவாரண நிலையத்தில், இந்த வியாதியைக் குணப்படுத்துவதற்கான பயிற்சி டாக்டர்களுக்கும், நர்சுகளுக்கும் அளிக்கப்படுகின்றன. —ரேபன்

அண்ணாதுரை உள்ளிட்ட ஐவரையும் சிறையிலேயே வைத்திருக்க ஆச்சாரியார் சர்க்காரின் ஆசை!

மேலும் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று உயர்நீதி மன்றத்தில் அப்பீல் தாக்கல்

சர்க்கார் அப்பீல் மனுவின் முதல் வாய்தா நாள் 9-11-53 ஆகும்

தலைவர்கள் ஐவரும் சிறையில் இருந்துவருகிறார்கள். அவர்கள் விடுதலை அடைய இன்னும் 24 நாட்களே உள்ளன. அதாவது, இத்திங்கள் 30-ந் தேதி காலை, தலைவர்கள் விடுதலை அடைகிறார்கள்.

இது ஆச்சாரியார் சர்க்காருக்குப் பிடிக்கவில்லை. தலைவர்களை, மேலும் சிறையிலே தள்ளி வைத்திருக்க ஆச்சாரியார் சர்க்கார் துடியாகத் துடிக்கிறது.

எனவே, மாகாண முதல் மாஜிஸ்திரேட், ஐவருக்கும் கொடுத்த தண்டனை மிகவும் குறைவாக இருக்கிறது என்றும், மேலும கடுமையாக தண்டிக்க வேண்டும் என்றும் சென்னை சர்க்கார் சார்பில் உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டு இருக்கிறது.

அந்த அப்பீல் முதல் வாய்தா, வருகிற திங்கட்கிழமை போடப்பட்டு இருக்கிறது.

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, மற்றும் தோழர்கள மதியழகன், சம்பத், நெடுஞ்செழியன், நடராசன் ஆகியோர் மீது, இந்தியன் பினல கோட் 117, 341 செக்ஷன்கள்படியும், ரயில்வே சட்டம் 108, 128 பிரிவுகள்படியும் சர்க்கார் தொடுத்திருந்த வழக்கில், சென்னை முதல் மாகாண மாஜிஸ்திரேட் எம். ஏ. வெங்கடரமண நாயுடு அவர்கள் 1—9—53-ல் தீர்ப்பளித்தார்.

தலைவர்கள் ஐவரும் மேற்படி சட்டப் பிரிவுகளின்படி குற்றவாளிகள் எனக் கருதி, கோர்ட் கலையும்வரை காவல் தண்டனையும், ஒவ்வொருவருக்கும் ரூ 500 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் 3 மாத சிறை தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

தலைவர்கள் ஐவரும் அபராதம் கட்ட மறுத்து, சிறை புகுந்தனர்.

அபராதத் தொகையை, தலைவர்கள் சிறையில் இருக்கும் போதே, அவர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஜப்தி செய்து ஏலம்போட்டு வசூலித்துவிட திட்டமிட்ட சர்க்கார், 14—9—53-ல், ஜப்தி வாரண்டுக்கு மாகாண முதல் மாஜிஸ்திரேட்டுக்கு மனுச் செய்து கொண்டது. மாஜிஸ்திரேட்டும் 15—9—53-ல் ஜப்தி வாரண்ட் கொடுத்துவிட்டார்.

இந்த ஜப்தி வாரண்டைத் தடை செய்ய, ஐவர் சார்பில் தடை உத்தரவுகோரி, உயர் நீதிமன்றத்தில் 18—9—53ல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதை விசாரித்த நீதிபதி, அபராதத் தொகையை வசூல் செய்வதை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டு இருந்தார்.

இந்த உத்திரவின் காரணமாக, ஜப்தி வாரண்டை சர்க்காரால் நிறைவேற்ற முடியவில்லை.

இந்தியாவின் உணவுக் கொள்கை

நிர்ணயிக்க உணவு மந்திரிகள் மாநாடு

புதுடில்லி, நவ. 6—

அடுத்த ஆண்டின் உணவுக் கொள்கை பற்றி, எல்லா மாநில உணவு மந்திரிகள் மாநாடு டில்லியில் நடக்கும்போது நிர்ணயிக்கப்படும் எனத் தெரிகிறது.

'கண்ட்ரோலை' எடுத்ததால் ஏற்பட்ட பலன், சில இடங்களில் பாதி அளவு கண்ட்ரோல் இருப்பதால் உள்ள நிலைமை இவை குறித்துப் பரிசிலனை செய்யப்படும். இப்போதுள்ள கொள்கையையே நீடிப்பதா என்பது குறித்து முடிவு செய்யப்படும்.

நவம்பர் மாத அறுவடையில் கிடைக்கும் உணவுத் தானியங்களின் அளவும் கவனிக்கப்படும்.

கொள்முதல் விஷயமாக இந்தியா முழுவதும் ஒரேவிதமான கொள்கையை அநுசரிப்பது பற்றியும் யோசிக்கப்படும்.

1953-54-ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், மத்திய சுங்கவரி வருமானம் மூலம், மெட்டத்தட்ட 46 11 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

பந்தி நடைபெற்றதாம் இந்த அவல நிலை எந்த அளவில் கொண்டு விடப்போகிறதோ என்று பொது மக்கள் பயப்படுகிறார்கள்.

—இந்தச் செய்தி நாகர்கோயிலிருந்து வெளியாகும் 'தியாக நாடு' என்ற பத்திரிகையின் நவ. 2 இதழில் வெளிவந்துள்ளது.

பார்ப்பனர்கள் மட்டுமே தண்டச் சோற்றில் உண்டு கொழுப்பதற்கு எதிர்ப்பு!

—(:)—

மக்களின் உரிமை வேட்கை அறப் போராட்டமாக மாறிற்று

நாகர்கோயிலில் உருவாகியுள்ள புதிய நெருக்கடி

நாகர்கோவில், நவ. 2—

வழக்கம்போல் நடத்தப்படும் வடிவீசுவரம் அழகம்மன் கோவில் திருக்கல்யாணத் தினமான இன்று பதிவுபோல் பார்ப்பனர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சமயம் வடிவீசுவரத்திலுள்ள வெள்ளாள வகுப்பைச் சார்ந்த சுமார் 150 பேர்கள், எங்களுக்கும் சாப்பாடு வேண்டுமென்று கேட்டு உள்ளேபோக, சாப்பிட்டுக்கொண்டிருந்த பார்ப்பனர்களெல்லோரும் "சூத்திரர்கள் வந்துவிட்டார்கள்" என்று கூக்குரலிட்டு வெளியேறி விட்டார்கள். நிலைமோசத்தைக் கண்ட அவ்வூர் பிரதானிகளான சு. கிருஷ்ணசாமி பிள்ளை (தர்மகர்த்தா) கிருஷ்ண பிள்ளை (பென்ஷன் காரியம்) முதலியோர்கள் அந்த 150 பேரையும் சமாதானத்தால் தடுத்து நிறுத்தினார்களாம் ஆனால் எதிர்பாராத விதமாய் நடந்த ஒரு பார்ப்பானின் சூழ்ச்சியால் போலீஸ் ரெசர்வே எல்லோரும் வானில் வந்து இறங்கி விட்டார்களாம். இறங்கியவர்கள் ராஜேந்திரன், வேலு, செல்லையா, குமரேசன், தேசியப்பன், சோமு, இராவணன், சுந்தரம் ஆகியோரை கைது செய்தார்களாம் இதைக் கண்ட வடிவீசுவரம் மக்கள், அம்மன் பெயரிலிருக்கும் சொத்து எங்கள் சொத்து, எங்களுக்கு ஏன் சோறில்லை என்ற உரிமைக் குரலை எழுப்பி உள்ளம் குமுறி நிற்கிறார்களாம். போலீஸ் காவலுடன், பார்ப்பனர்களின்

(தொடர்ச்சி 1-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஐவர் சிறையில் இன்று 67-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 6—11—1953 வெள்ளி

மணி ஓசை வருமுன்னே!

"யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே," என்ற மூதுரை அனைவரும் அறிந்ததே. இந்த மூதுரையைக் காங்கிரஸ் கட்சியினரும் அறிந்திருக்கிறார்கள். முக்கியமாக ஆச்சாரியார் அமைச்சர் குழுவில் இருக்கிறவர்கள் மிக மிகத் தெளிவாக இந்த உரையை உணர்ந்துகொண்டு பேசியும் வருகிறார்கள்.

தம் சொந்த விஷயத்தில் தேர்தலில் போட்டியிடுவது என்பதை அமைச்சர் ஆச்சாரியார் அறவே வெறுத்துவந்த போதிலும், தனது கொள்கையின் எதிர்ப்பாளர்களை மட்டும், தேர்தலில் கலந்து, பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுங்கள் என்று, அடிக்கடிக்கு அறைகூவல் விடாமல் இருப்பது கிடையாது. வாய்ப்பு இருந்தாலும் இல்லாமற் போனாலும், தன் அரசியல் வாழ்வுக்கு ஒத்துக்கொள்ளாத ஒன்றை, தங்கள் விஷயத்தில் மற்றவர்கள் ஒத்துக்கொண்டு நடக்க வேண்டும் என்று வலியுறுத்துவதில் அமைச்சர் ஆச்சாரியார் இதுவரையில் தவறியதே கிடையாது. மற்றவர்கள் விஷயத்தில் அவசியம் என்று சொல்லுவதையும், நியாயம் என்று கூறுவதையும், தம் சொந்த விஷயத்திலும் ஏற்றுக்கொண்டு நடைமுறையில் நடந்து காட்ட வேண்டுமே என்ற, உயர்ந்த நோக்கும் போக்கும் அமைச்சர் ஆச்சாரியார் பெருந்தகைக்கு இதுவரை ஏற்படவில்லை. இனி ஏற்படும் என்று நம்புவதற்கும் இடம் கிடையாது.

மற்றவர் எதிர்ப்பின் உண்மையை அளக்க, தாம் குறிப்பிடும் அதே அளவுகோலைக் கொண்டே, தம்முடைய நடைமுறையையும் அளந்து பார்க்க எதிர்ப்பாளர்கள் முன்வருவரோ என்ற நினைவும் அமைச்சர் ஆச்சாரியாருக்கு இருப்பதாகச் சொல்வதற்கில்லை. பிறரிடம் எதிர்நோக்குவதைத் தாமும் மேற்கொண்டு ஒழுகினால்தானே, பிறர், தம் போக்கைச் சிறப்பிப்பர் என்ற சாதாரண நடைமுறை ஞானமும், அமைச்சர் சி. ஆர். அவர்களிடம் இதுவரை இருந்திருப்பதாக எவரும் துணிந்து கூற முடியாது. அவருடைய பொது வாழ்வு முழுதும் தன்முனைப்புத் துறையிலேயே கழிந்த ஒன்றாகும். தமக்கொரு நியாயமும், நீங்கிய மற்றவருக்கு வேறு நியாயமும் கூறி, அதையே 'ஆண்டவன் காட்டிய அறநெறி' என்று பேசிப் பேசிப் பழகிவிட்டதோடு, அந்த அதர்மமே தமது குருதியில் கலந்து உறைந்து போயிருக்கிற பரம்பரைப் பண்பை மாற்ற முயற்சிக்காமல், மாற்ற ஒருப்படாமல், கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்துவரும் திருமேனியாகக் கொண்டதும் நமது அமைச்சர் ஆச்சாரியாருடையது!

இந்த ரகசியத்தை உணர்ந்துகொண்டால்தான், ஆச்சாரியாரின் செயலுக்கும், சொல்லுக்கும் உள்ள முழுப் பொருளையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும். அமைச்சர் ஆச்சாரியார் அதிகார பீடத்தை அலங்கரித்துக்கொண்டிருந்தாலும், இல்லாமற்போனாலும் அவருடைய அறிவு தொழில்படும் முறையே, தமக்கொரு நியாயமும், பிறருக்கு முரண்பட்ட நியாயமும் பேசித்திரியும் தகுதியுடையதேயாகும். ஆரம்ப கால முதலே ஏற்பட்டுவிட்ட ஒரு நீண்டகால தொத்து நோயை, தனது வாழ்க்கையின் பிற்பகுதிய மாலையில் அமைச்சர் ஆச்சாரியார் விட்டுவிடுவார் என்று எதிர்பார்ப்பது அறியாமையிலும், அறியாமையேயாகும். நிற்க,

நமமுடைய நாட்டில், இப்பொழுது பெரும்பாலான மக்களிடம் காணப்படும் அரசியல் விழிப்புணர்ச்சி நிலையில், ஒரு பிரச்னையை முன்வைத்து, வாக்கெடுப்பது என்பதும், அந்த வாக்கெடுப்பின் முடிவைக் கொண்டு, குறிப்பிட்ட பிரச்னையின் நன்மை தீமைகளை அறுதியிட்டு முடிவு கூறுவதென்பதும், நூற்றுக்கு நூறும் பொருந்தாதது என்பதை, நாட்டு மக்கள் நிலை உணர்ந்துள்ளவர் அனைவரும் ஒப்புவரென்றே நம்புகிறோம். இத்துறையில் இரு கருத்து இருக்க எள்ளத்தனையும் நியாயமுமில்லை.

பல நூறு ஆண்டுகளாக மக்களைப் பிடித்துள்ள பூஜா மனோபாவமும், தங்கள் வாழ்க்கையைத் தாங்களே காக்க செயபனிட்டுக் கொள்ள வேண்டும் என்ற பெருமையில் மக்கள் கொண்டுள்ள தன்னம்பிக்கையற்றுப் போகும் தேர்தல் முடிவுகளைக்கொண்டு, ஒரு பிரச்னையில் உள்ள நியாய அநியாயத்தைத் தீர்மானிக்க முடியாமல் இருக்கிறது என்பது வெளிப்படை. இந்த நாட்டு மக்களின் பற்போக்கான மனவளத்தைத் தெரிந்திருக்கின்ற காரணத்தால்தான் அமைச்சர் ஆச்சாரியார், தான் தேர்தலில் பங்குகொள்ள நடுக்கம் கொள்ளுகிறார். அதே காரணத்தால்தான் மற்ற எதிர்ப்பாளர்களைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுங்கள் பார்ப்போம் என்றும் அறைகூவல் விடுகிறார் அவர். நிற்க,

ஆச்சாரியார் பதவி ஏற்றபிறகு, நடைபெற்ற சில இடைக்காலத் தேர்தல்களில், விருதுநகர், நீங்கலாக மற்றத் தேர்தல்கள் அனைத்திலும் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்து, எதிர்ப்பாளர்கள் வெற்றி பெற்று இருக்கின்றனர் என்பது நாடறிந்த உண்மை

முடிவாக நடந்த விருத்தாசலம் இடைக்காலத் தேர்தலில் நமது தி. மு. கழகத்தின் ஆதரவு பெற்றவரும், உழைப்பாளர் கட்சியின் அபேட்சகருமான தோழர் சாமிக்கண்ணு அவர்கள் காங்கிரஸ் அபேட்சகரை முறியடித்திருக்கிறார். அமைச்சர் ஆச்சாரியாரின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தையே தேர்தல் பிரச்னையாக முன்வைத்து, காங்கிரஸ் அபேட்சகரைத் தோற்கடிப்பதின் மூலம், திட்டத்திற்கு எதிராக நமது ஆதரவாளர் வெற்றிபெற்றிருக்கிறார்.

வாக்காளர் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற, மக்களாட்சி முறைக்கு மதிப்பளிக்கும் அருங்குணம் அமைச்சர் ஆச்சாரியாருக்கு இருந்திருக்குமானால், விருத்தாசலம் தேர்தல் முடிவு தெரிந்தவுடன் தமது நச்சுத் திட்டத்தை மரியாதையாக வாபஸ் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அமைச்சர், மக்கள் தீர்ப்பை கழிவுக்கூடையில் போட்டுவிட்டார்.

இப்பொழுது கோவை மாவட்டத்தில், காங்கயம் தொகுதிக்கு இடைக்காலத் தேர்தல் நடைபெற இருக்கிறது; அதில், காங்கிரஸ் அபேட்சகர் ஒருவரும், சுயேச்சையாக ஒருவரும் போட்டியிடுகின்றனர். நமது முன்னேற்றக் கழகத்தின் சார்பில், சுயேச்சை அபேட்சகரான தோழர் கே ஜி. பழனிச்சாமி அவர்களை ஆதரிப்பது என்று தலைமை நிலையம் முடிவுக்கு வந்திருக்கிறது. இயக்க முன்னணி வீரர்களும், மற்ற கழகத் தோழர்களும் ஒத்துழைத்து வருகிறார்கள். எப்படியும் காங்கிரஸ் அபேட்சகருக்குத் தோல்வி நிச்சயம் என்பது வெள்ளிடைமலை.

அமைச்சர் ஆச்சாரியாரின் உதவாக்கரை கல்வித் திட்டத்தையே, தேர்தல் பிரச்னையாக, அத்தொகுதி வாக்காளர் முன் வைக்கப்பட்டிருக்கிறது. புதிய கல்வித் திட்டத்தை அத்தொகுதி மக்கள் தீவிரமாக எதிர்க்கிறார்கள் என்ற உண்மை நமது வாசகர்கள் நன்கு அறிந்ததேயாகும். எனவே, காங்கயம் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர் படுதோல்வி அடைவது ஏற்கனவே முடிவாகிப்போன செய்தியாகும்.

இந்த நமது அசைக்க முடியாத நம்பிக்கைக்கு அரண் செய்யும் முறையில் காங்கிரஸ் அமைச்சர் இருவரின் அங்கலாய்ப்புப் பேச்சும் இருக்கிறது. காங்கிரஸ் அமைச்சரிலும் முகாரி பாடும் அமைச்சர் மிகமிக முக்கியமானவராவார்.

"பொதுத் தேர்தலில் நாம் பெருவாரியான ஸ்தானங்களை இழந்துவிட்டதைப் பற்றி யாருமே கவலைப்படக் கூடாது. அம்மாதிரி தோல்வி அடைந்தால்தான் ஜனங்கள் விழிப்படைவார்கள்."

"இந்த ஊருக்குச் சமீபத்தில் இருக்கும் காங்கேயத்தில் உப தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலையும், அறுப்புக்கோட்டை தொகுதி மாதிரி கோட்டை விட்டு விடக்கூடாது."

இவ்வாறு, புதிய அமைச்சர் திருமங்கலத்தார், ஈரோட்டில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

காங்கயத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய நிதி அமைச்சர் அவர்கள்,

"காங்கிரஸ் அபேட்சகர் தோற்றுவிட்டால் அதைப் பற்றிக் கவலை இல்லை,"

என்றும், அதே கூட்டத்தில் கலந்துகொண்ட, கோவை மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பேசும்பொழுது,

"ஈரோடு தாலுக்காவில் காங்கிரஸ் வேலை அவ்வளவு நல்ல முறையில் வேலை செய்யவில்லை. சென்ற பொதுத் தேர்தலில் இந்தத் தாலுக்காவில் பூரா ஸ்தானங்களையும் கோட்டை விட்டோம்,"

என்றும குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த மூவர்கள் பேச்சும் எதைக் காட்டுகிறது? காங்கயம் தொகுதியில், பொதுமக்கள், காங்கிரசை வெறுக்கிறார்கள் என்பதைத்தானே?

சென்ற பொதுத் தேர்தலிலேயே, பொதுவாக ஈரோடு தாலுக்காவிலும், குறிப்பாகக் காங்கயம் தொகுதியிலும் காங்கிரஸ் அபேட்சகர் மண்ணைக் கவ்வி இருக்கும்போது, இந்த இடைக்காலத் தேர்தலிலும் காங்கிரஸ் அபேட்சகர் மண்ணைத்தான் கவ்வுவார் என்ற உண்மையை, இந்த மூன்று காங்கிரஸ் காவலர்களும் உறுதியாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதை, அவர்கள் தேர்தல் பேச்சிலிருந்தே நாம் விளக்கமாகப் புரிந்து கொள்ளலாம்.

'யானை வரும் பின்னே. மணியோசை வரும் முன்னே', என்பார்களே, அதுபோலவே, இரு அமைச்சர்களும், காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், தேர்தல் நாளும், முடிவும் வெளிப்படையாகத் தெரிவதற்கு முன்பாகவே, வரவிருக்கும் தோல்வியை முன்கூட்டியே உணர்ந்து, தேர்தலில் பங்கு கொள்ளும் காங்கிரஸ் அபேட்சகருக்கு ஆறுதலும் அனுதாபமும், தங்களுடைய கவலை தோய்ந்த உள்ளத்துக்கு நிம்மதியும் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் நிலை கண்டு நாமும் பரிதாபப்படுகிறோம்.

காங்கயம் தேர்தலில், நமது கழகத்தின் ஆதரவு பெற்றுள்ள அபேட்சகர் தோழர் கே. ஜி. பழனிச்சாமி அவர்கள் வெற்றி, முன்னமே தெரிந்த முடிவாக இருந்தபோதிலும், தேர்தல் பித்தலாட்டங்களில் கைதேர்ந்தவர்கள் காங்கிரஸ் கட்சியினர் என்பதை கவனத்தில் வைத்துக்கொண்டு, நமது ஆதரவு பெற்ற அபேட்சகரின் வெற்றிக்குரிய பணியினை விழிப்புடன் புரியுமாறு, காங்கயம் தொகுதி வாக்காளர்களையும், தி. மு. கழகத் தோழர்களையும் வேண்டிக்கொள்கிறோம்.

'பதவி வெறியால் ஆச்சாரியார் நிதானம் இழந்துவிட்டார்'

★

மதுரை, நவ. 4—

ஆச்சாரியாரின் புகார் அறிக்கையைக் கண்டித்து, காமராசர் குழுவைச் சேர்ந்த தோழர் டி. ஜி கிருஷ்ணமூர்த்தி இன்று, பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அதில், அவர் கூறுவதாவது:—

"ஆச்சாரியார், பதவி வெறியினால் நிதானம் இழந்துவிட்டார். சட்ட சபை காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் மீது புகார் கூறி, அவர் அறிக்கை விடுருப்பதைக் கண்டு நான் திடுக்கிட்டேன் தன் ஆட்சிக்கு சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியில் பெரும்பான்மை ஆதரவு இல்லையென்ற பீதியில் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதற்காகவே அவர் இம்முயற்சி செய்திருக்கிறார்"

"நேருவுக்கு அனுப்பிய புகார் மனுவில் கையொப்பமிட்டவர்களில் நானும் ஒருவன். காங்கிரஸ் ஆட்சி நடத்துவதின் நோக்கமே அதன் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காகத்தான். அந்த இலட்சியங்கள் நிறைவேற்றப்படாமலிருப்பதால் அதைப் பற்றிப் புகார் செய்ய காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. எங்கள் புகாரை நேரு வெறுக்கிறார். ஆச்சார்யார் கண்ணியமற்ற முறையில், தான் ஒரு காங்கிரஸ்காரர் என்பதையும் மறந்து கேவலமான முறையில் புகார் செய்திருக்கிறார்"

"டாக்டர் வரதராஜுலு நாயுடுவை 'கட்சி மாறியவர்' என ஆச்சாரியார் கூறுகிறார். ஆனால், 1942-ல் ஆச்சாரியார் பற்றி உலகம் நன்கறியும்."

"புதிய மூன்று மந்திரிகளை நியமனம் செய்தது நியாயம் என்கிறார். பதவிவெறி ஆச்சாரியாரை நிதானம் இழக்கச் செய்து விட்டது. இனிமேற்கொண்டாவது ஆச்சாரியார் இது போன்ற ஆபாச பிரசாரங்களை வெளியிடாமலிருப்பாரென்று நம்புகிறேன்."

கல்லூரி மாணவர் தமிழ் விழா

சென்னை, நவ. 6—

சென்னை நகரக் கல்லூரிகளில் கல்வி பயிலும் தமிழ் மாணவரிடையே கூட்டுறவை ஏற்படுத்துவதன் மூலம் மொழிக்கும் நாட்டுக்கும் நன்மை பல செய்தல் இயலும். இதனை செயற்படுத்த பச்சையப்பன் கல்லூரி தமிழ் மன்றம் விடுத்த அழைப்பினை ஏற்று, சென்னையிலுள்ள எல்லா கல்லூரி மாணவர்களின் பிரதிநிதிகளாக அவ்வக்கல்லூரி தமிழ் சங்கங்களின் மாணவர் தலைவர், செயலாளர் ஆகியோர் சென்ற 31—10—53ல், பச்சையப்பன் கல்லூரியில் கூடினர். தலைமை தாங்கிய தோழர் அன்பு-கணபதி நகரக் கல்லூரி மாணவர் தம்முள் கலந்து பழகுவதால் ஏற்படும் நன்மைகளை விளக்கி, தமிழ் மாணவரிடையே இத்தகையதொரு அமைப்பு இருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார்.

கல்லூரி மாணவரின் தமிழ் விழாவை ஜனவரி மாதம் மூன்றாவது வாரத்தில், ஐந்து நாட்கள், ஐந்து கல்லூரிகளில் நடத்துவதென்றும், இவ்வமைப்பினுக்கு இயக்குநராக டாக்டர் மு. வரதராசனார் அவர்களையும், ஆலோசகர்களாக தோழர் ராசாக்கண்ணனார், தோழியர் மேரி மாசிலாமணி அம்மை, தோழர் அன்பு கணபதி ஆகியோரை இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகத் தீர்மானித்தது. பின்னர் செயற்குழு ஒன்றும் அமைக்கப்பெற்றது.

தூத்துக்குடி வழக்கு நிதி

★

முன் தொடர்ச்சி (31—10—53) ரூ.	1508—3—1
அறிவிக்காடு, செக்காடு. லட்சுமி முதலிய தோட்டத் தொழிலாளிகளிடமிருந்து மூணர் தி மு. கழகம் வசூலித்தனுப்பியது	20—0—0
சென்னை கொண்டித்தோப்பு, படவட்டம்மன் கோயில் கிராமவாசிகளால், தோழர் ஒய் என். பழனியாண்டி மூலம்	12—4—0
வேலூர்—வேலப்பாடி தி. மு கழக மாணவர்கள் சார்பாக தோழர் இரண்டுகண்ணன் மூலம்	2—4—0
ராமநாதபுரம் புதூர் தி. மு கழகம்	5—0—0
ஆர். ஆறுமுகம், வேலூர்	2—0—0
அனுப்பன்குளம் தி. மு. கழக அனுதாபிகள் சார்பாக கா. கருப்பையா	8—0—0
மதுரை ர. தங்கராசன்	7—4—0
சென்னை, வண்ணாரப்பேட்டை ஆறுமுகம்	1—0—0
,, கணேசன்	1—0—0
,, தர்மர்	1—0—0
,, தேவராஜ்	1—0—0
,, ராமையா	1—0—0
,, சுப்ரமணியம்	1—0—0
,, வேதம்	1—0—0
,, குட்டிவேல் நாடார்	3—0—0
கொய்யல் எம் செல்லப்பன்	1—0—0
,, என். கே. சாமியப்பன்	1—0—0
,, கே. செல்லப்பன்	1—0—0
,, ராமசாமி	1—0—0
,, எம். வேலன், கே. வேலன், கே. ஆறுமுகம், சி. ரங்கசாமி, ந. பெரியபையன், ந. ஐம்புலிங்கம் ஆகியோர்	3—0—0
எழுமலை சி. ச. கா. குருசாமி	5—0—0
ஆத்தங்குடி எம். சி. அண்ணாதுரை	1—0—0
சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை தி மு கழக அனுதாபிகள் (தோழர் பரமசிவம் மூலம்)	5—0—0
சிங்கப்பூர் லெ. குப்புசாமி	5—0—0
,, ரா. நாகையா	3—0—0
,, வ. கந்தசாமி	2—0—0
தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. மூலம், திட்டக்குடி தி. மு. கழக பொதுக்கூட்ட வசூல்	14—10—6
திட்டக்குடி மாணவர் தி மு. கழகம்	9—0—0
கோடங்குடி தி. மு. கழகத் தோழர் பெரியசாமி	2—0—0
கார்கூடல் தி. மு. கழகம்	4—0—0
மருவாத்தூர் மு ரங்கசாமி	2—0—0
புதுக்கோட்டை செல்வம் அண்டு கம்பெனி	5—0—0
சேலம்—அம்மாபேட்டை முருகேசனூர்	5—0—0
,, கே. ராமசாமி	1—0—0
,, வி. முருகன்	1—0—0
,, டி. குமரப்பன்	1—0—0
,, எ. குள்ளப்பன்	1—0—0
,, எம். பழனியப்பன்	1—0—0
வேப்பலோடை அ. கு. அ. மலையப்பன்	2—0—0
செங்கோட்டை—மேலூர், டி எம். அனிபா	1—0—0
சென்னை 43-வது வட்டம் தி. மு கழகம்	7—8—0
சென்னை பாரி கம்பெனி 'அக்கவுண்ட்' செக்ஷன் தோழர்கள் எல். முருகேசன் மூலம்	7—8—0
சென்னை திருவல்லிக்கேணி புத்தொளி மன்றம்	7—0—0
சென்னை-3, தென்பகுதி ரயில்வே தலைமை அலுவலகம் அனுதாபிகள் மூலம்	15—8—0
சென்னை—7, மா. சண்முகம்	1—0—0
,, டி. கே. கோவிந்தசாமி	1—0—0
தஞ்சாவூர் வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிலாளர்கள் :—	
பெ. நடராசன்	1—3—6
பி. வேல்சாமி	1—0—0
கே குமாரசாமி	1—0—0
கு. அண்ணாமலை	1—0—6
ஆர் முத்தையாபாண்டியன்	1—0—0
ஜி. சண்முகம்	1—0—0
ஆர். நடராசன்	1—0—0
கே. பாலையா	1—0—0
கே. தங்கையன்	1—0—0
பி. செம்புலிங்கம், என். சர்க்கரை, கே. பழனிசாமி, துரைராசன், முனிய பிள்ளை, ஆறுமுகம், மாணிக்கம், குமாரசாமி, மாரியப்பா, முருகையா பிள்ளை, மருதப்பிள்ளை, காசிவேல், சுந்தரமூர்த்தி, சாரங்கபாணி, பஞ்சாபிகேசன், மாணிக்கம், பாலகிருஷ்ணன், தங்கராஜ், முத்தசாமி, வெங்கடாசலம், குருசாமி, நரசிம்மன் ஆகியோர்	8—4—0
புதுக்கோட்டை, என். சொக்கலிங்கம்	1—0—0
ராசகோபாலபுரம், பி. வாசு	1—0—0
மாயூரம் தி. மு. கழக பொதுக்கூட்ட உண்டி வசூல்	10—0—0
சிவகிரி தி. மு. கழகம்	4—0—0
திருப்பூர் ஜே. பாலசிங்	1—0—0
,, என். பழனிசாமி	2—0—0
,, சி பழனிசாமி	2—0—0
,, எஸ். கோவிந்தராஜ்	3—0—0
,, வி. ராஜகோபால்	1—0—0
,, எ. கே சீனிவாசன்	1—0—0
,, எம். வெங்கடாசலம்	1—0—0
,, டி. ஆர். வரதராசன்	1—0—0
,, வி. வேணுகோபால்	1—0—0
,, மாணிக்கம், பாலகிருஷ்ணன், சுப்ரமணியம், முத்துகுமாரசாமி, நடராசன், ராமதாஸ், கருப்பண்ணன், பழனிசாமி, ரங்கசாமி, ஜெகநாதன், எம் சுப்ரமணியம், கே. என். நாயர், பி. கே. பழனிசாமி, வி. ஆறுமுகம்	

(தொடர்ச்சி அடுத்த பத்தி பார்க்கவும்)

'நிருபர் கைது செய்யப்பட்டதை நிருபர்கள் தடுத்தனர்'

'பத்திரிகை நிருபர்கள் என்ற பெயரில் பலர் ஒன்றுகூடி தடையை மீறினர்'

தேசிய ஏடுகளின் தில்லுமுல்லை விசாரணைக் குழு அம்பலப்படுத்துகிறது

கல்கத்தா, நவ. 4—

சென்ற ஜூலை மாதம் 22-ந் தேதியன்று மைதானத்தில் நடைபெற்ற சம்பவம் பற்றி கல்கத்தா போலீசார்மீது கல்கத்தா பத்திரிகையாளர்கள் கூறிய புகார்கள் ஆதாரமற்றவை என்று விசாரணைக் குழு தனது அறிக்கையில் கூறியிருக்கிறது 'பத்திரிகையாளர்கள்மீது திட்டமிட்டு தாக்குதல் நடந்த'தென பத்திரிகையாளர்கள் கூறுவது ஆதாரமற்றவை என கமிஷன் அறிக்கை கூறுகிறது.

கமிஷன் அறிக்கையில், 'ஐந்து பேருக்கு மேல் கூடக் கூடாது என்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் ஏராளமான பத்திரிகையாளர்கள் கூடினார்கள் பத்திரிகை நிருபர் ஒருவர் கைது செய்யப்பட்டபோது மற்றைய நிருபர்கள் தலையிட்டது சட்டத்தை மீறியதாகும். பத்திரிகை நிருபர்களின் சலுகை மற்ற பிரஜைகளின் சலுகையை விட அதிகமானதல்ல பத்திரிகையாளரின் சுதந்திரம் கடமையாற்றும் போலீசாரின் வேலையில் தலையிட உரிமையளிக்கவில்லை."

"பத்திரிகையாளர்களுக்கு செய்தி கிடைக்கும் வசதிகளை போலீசார் தடைசெய்யவில்லை. எந்த சம்பவம் குறித்தும் நியமிக்கும் படையினர் நிருபர்களுக்கு தகவல் தர மறுத்ததை மெய்ப்பிக்க சாட்சியில்லை. ஒரு நிருபர் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக அவரேதான் சட்டத்தை மீறியதாக ஒப்புக்கொள்கிறார்," என கமிஷன் அறிக்கை கூறுகிறது.

"கல்கத்தா டிராம் கட்டண உயர்வு சம்பந்தமாக ஜூலையில் கிளர்ச்சி நடந்தது. ஜூலை 22-ம் தேதியன்று பத்திரிகையாளருக்கும் போலீசுக்கும் தகராறு நடந்தது பத்திரிகையாளர் தாக்கப்பட்டதாக புகார் கூறப்பட்டது பத்திரிகையாளர்களின் புகார் பற்றி விசாரிக்க நீதிபதி முகர்ஜியை வங்க சர்க்கார் நியமித்தது.

தெரிந்து கொள்ளுங்கள்

1. முதல் ஐந்து ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாசன—மின்சார வேலைத் திட்டங்கள், இன்னும் பூர்த்தியாகாமலிருந்த போதிலும், அவை ஏற்கனவே 14.2 லட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி அளித்திருக்கின்றன; 3,15,00 கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்திருக்கின்றன.
2. இந்திய ரயில்வேக்களில். லைசென்சு பெற்ற சுமார் 4,000 சிற்றுண்டி நிலைய கண்டிராக்டர்களும், சாமான்கள் விற்பனை கண்டிராக்டர்களும், பிரயாணிகளுக்குச் சேவை செய்து வருகின்றனர்; இவர்கள் இந்திய ரயில்வேக்களுக்கு ஆண்டுதோறும் 25 லட்ச ரூபாயை லைசென்சு கட்டணங்களுக்காகச் செலுத்தி வருகின்றனர்.
3. 1953 ஜனவரியிலிருந்து ஜூன் வரையுள்ள காலத்தில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகளில், 46.5 சதவிகிதம், முழுதுமோ, ஓரளவோ இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட பொருள்களாகும்; அவற்றின் மொத்த பெறுமானம் 113.64 கோடி ரூபாய்.

(முன் பத்தியின் தொடர்ச்சி)

ஆகியோர்	7—0—0
சிவகாசி, பி. எம். பெரியதம்பி	3—0—0
சென்னை, பெரம்பூர் டி. ஜே. ராஜரத்தினம்	1—0—0
கருவைக்குளம், பி. தங்கசாமி	1—0—0
திருப்பூர் தி. மு. கழகப் பொதுக்கூட்ட வசூல் ஆசைத்தம்பி மூலம்	7—12—0
சிவகாசி—சம்பைப்பேட்டை, தி. மு. கழக அனுதாபிகள் ஆ செல்வராஜ் மூலம்	7—9—0
வைதீஸ்வரன் கோயில் முத்துகிருஷ்ணன், முத்தையன். கோவிந்தராசன், வேலன், ராமசாமி, கன்னையன், சுப்பையன், முருகையன், லட்சுமணன், சம்பந்தம், செல்வரத்தினம், ஜி. கன்னையன் ஆகியோர்	5—8—0
பாண்டமங்கலம், தி. மு. கழகம்	5—0—0
ஆரப்பாளையம், தி. மு. கழக இளைஞர்கள்	2—2—0
ஒத்தக்கடை வட்டாரம் தி. மு. கழகம்	5—0—0
கிருஷ்ணாபுரம் தி. மு. கழகம், கே. டி. என் சாமி	2—0—0
பாப்பநாயக்கன் பாளையம், கோவை என். ஆர். மாணிக்கம்	2—0—0
சென்னை எழும்பூர் ரயில்வே தோழர்கள்	6—8—0
,, ஆ. சமபந்தம்	1—0—0
,, கனகசுப்ரமணியன்	1—0—0
,, இரா. பக்தவச்சலம்	1—0—0
,, கே. கூத்தரசன், ப. மகாலிங்கம்	1—0—0
சென்னை மின்சார ரயில்வே தோழர்கள்	12—0—0
சின்ன காஞ்சிபுரம், வி கவமணி அம்மாள்	1—0—0
சென்னை-3, இ. வேணுகோபால்	2—0—0
அத்துக்குடி, பி. சி. பழனிசாமி	3—0—0
,, பி கே. பழனிசாமி	3—0—0
மே. க. கோட்டை, மு. மாணிக்கம்	2—0—0
திருச்சி அனுதாபி ஒருவர்	1—0—0
சென்னை—ஆலந்தூர் நாகநாதன்	3—0—0
கோயம்புத்தூர், எ. பழனியப்பன்	1—0—0
,, என் நாகப்பன்	1—0—0
,, பெருமாள், மனோகரன், கே. ராமசாமி, மாதவன், சுப்பையன், கிருஷ்ணன், ராமசாமி, ஆர். ராமசாமி, பாக்கியநாதன், ரங்கநாதன், சின்னசாமி ஆகியோர்	3—8—0
சென்னை, இ. துரைராசன், அ. புனிதவல்லி, மெ. சீனிவாசலு, வெங்கடாசலம், முனிரத்னம், த. வேலு, இரா. கேசவன், சந்தானம் ஆகியோர்	10—0—0
ஆக மொத்தம் ...	1840—8—7

கழகக் கூட்டங்கள்

★

சென்னை :

(தண்டையார் பேட்டை)

8—11—53

தலைவர் : ல. கண்ணன்

பேசுவோர் :

கடல்அன்பன்

கோ. இறைமுடிமணி

★

ஆத்தூர் :

7—11—53

தலைவர் : என். கைலாசம்

பேச்சாளர் :

கவிஞர் கண்ணதாசன்

சிற்றரசு சுப்ரமணியம்

எம். பி. சுப்ரமணியம் எம்.எல்.ஏ.

★

திண்டுக்கல் :

8—11—53

தலைவர் : பி. இராமசாமி

பி. சமதர்மம்

என். முத்து

ஏ. ராசு

கே. செழியன்

★

செங்குன்றம் :

8—11—53

தலைவர் : ஏ. கங்காதரன்

பேசுவோர் :

பி. சாலமோன்

க. சேரன்

26-வது வட்ட தி. மு. க. தேர்தல்

8—11—53 ஞாயிறு மாலை 4 மணிக்கு 26-வது வட்டத்தில் தி. மு. க. தேர்தல் பாரக்ஸ் ரோடு, பெரியமேட்டில் நடைபெறும். எல்லா 26-வட்ட தி. மு. கழக உறுப்பினர்களும் தவறாது இதையே அழைப்பாகக் கொண்டு வர வேண்டுமென மேற்படி கழக அமைப்பாளர் தெரிவிக்கிறார்.

★

சென்னை மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

9—11—53 திங்கள் மாலை 6 மணிக்கு ராயபுரம் 'அறிவகத்தில்' மேற்படி அவசரக் கூட்டம் நடைபெறும். தி மு. கழகப் பொதுச்செயலாளருக்கும், மற்றவர்களுக்கும் வரவேற்பளிப்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு மாவட்டச் செயலாளர் கண்ணபிரான் கேட்டுக்கொள்கிறார்.

★

புளியந்தோப்பு தி. மு. க. தோழர்களுக்கு

புளியந்தோப்பு தி. மு கிளைக் கழகக் கட்டடத்திற்குள், 8—11—53-ல் மாலை 5 மணியளவில் தூத்துக்குடி வாரம் கொண்டாடப்படும். அங்கத்தினர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு வரவேண்டுமாய் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன் என்று கிளைச் செயலாளர் கேட்டுக்கொள்ளுகிறார்.

காசிமாநகர் ஊழியர் கழகம்

சென்னை, நவ. 1—

31—10—53ல், கழகக் காரியாலயத்தில், அங்கத்தினர்கள் பொதுக்கூட்டம் கூடி, தோழர் கே. கண்ணப்பனைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், செயல் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

"அராஜகத்தின் ஆணிவேரான ஆச்சாரியார் மட்டும் கைது செய்யப்படாமல் இருக்கிறார்!"

"கருத்து வேற்றுமைக்காக எதிர்ப்பாளர்களை 'எதிரிகள்' 'வகுப்புவாதிகள்' என்பது சுத்த அறிவீனம்"

சைமன் குழுவுக்கு தாம் காட்டிய கருப்புக் கொடியை காங்கிரஸ்காரர்கள் இதற்குள் மறந்து விட்டார்களே?

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமியின் ஆணித்தரமான பேச்சு

மதுரை, நவ. 3—

"இந்நிலையில் சட்ட வரம்பிற்குட்பட்டுக் கிளர்ச்சி நடத்திய பல தலைவர்கள் சிறையிடப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அராஜகத்தின் ஆணிவேராயிருக்கும் ஸி. ஆர். மட்டும், கைதாக்கப்படாமலிருக்கிறார் என்றால் நீதி, நிர்வாகத் துறைகளின் ஒழுங்குதான் என்ன?

"பதவிக்கு வந்தவுடன் தம்மைத் தேர்ந்தெடுத்தனுப்பிய வாக்காளர்கள் மடிந்துவிட்டதாகக் காங்கிரசார் கருதுகிறார்கள். ஆனால், அடுத்த தேர்தல் வரும்போது, 'நாங்கள் இறந்துவிடவில்லை; உயிரோடுதானிருக்கிறோம்,' என்று கூறி, சரியான பாடம் கற்பிக்கத்தான் போகிறார்கள்,"

என்று, 2—11—53-ல், இந்த அமெரிக்கன் கல்லூரி ஆங்கிலக் கழகத்தில், மாணவர் மன்றத்தின் சார்பில் கூட்டப்பட்ட கூட்டத்தில் பேசும்போது இந்தியப் பார்லிமெண்ட் உறுப்பினர் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி குறிப்பிட்டார்.

★

"ஜனநாயகமும், கட்சிச் சட்டமும்," என்ற தலைப்பின் கீழ் அவர் மேலும் கூறியதாவது:—

"ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாகக் கூறப்படும் ஒரு நாட்டில் எதிர்க் கட்சியினர் தங்கள் அதிருப்தியைத் தெரிவிப்பதன் அறிகுறியாகக் கருப்புக் கொடி காட்டலாம்; இது சட்ட வரம்பிற்குட்பட்டது; அமைதியான முறையில் ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடத்த ஜனநாயக நாட்டில் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.'

"சில ஆண்டுகளுக்கு முன்னால் காங்கிரஸ்காரர்கள் அந்நிய நாட்டுத் துணியை எரித்தார்களே அதன் பொருள் என்ன?—கலகமா? குழப்பமா? சைமன் குழுவினருக்குக் காட்டப்பட்ட கருப்புக் கொடி நிகழ்ச்சியைப் பண்டித நேரு மறந்திருக்க முடியாது. எதிர்க்கட்சிகளின் கொள்கைகளை உணராமல், ஆவேசத்துடன் அவர் தென்னாட்டு மக்களை ஏசியது, முற்றும் முட்டாள்தனம் என்றுதான் நான் கூறுவேன்.

("Without attempting to understand the truth of the matter, if he indulges in reproach it is none the less fantastically nonsensical.")

"நான், நீண்ட நாட்களாய்த் தென்னாடு—வடநாடு என்று பிரித்து உணராமல் தானிருந்து வந்தேன்; ஆனால், நான் வாழும் தென்னாட்டிலுள்ள அரசு, நாளுக்கு நாள் எதேச்சாதிகாரத்திலிறங்கி தனி மனிதனின் சுயமரியாதையைக் கெடுக்கும். உரிமைகளுக்குத் தடைவிதிப்பதாயிருக்கின்றதால் சிந்தனையுள்ள எவரும் சும்மா இருக்கமாட்டார்கள் நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அண்மையில் சென்னை முதலமைச்சர் புகுத்தியிருக்கும் உதவாக்கரைக் கல்வித் திட்டத்தைப் பற்றித்தான். அதைக் கொண்டு வரும்போது, அவர், தம் கட்சியினரையோ, சட்டசபை உறுப்பினர்களையோ கலந்து யோசிக்கவில்லை.

அதற்குரிய வாக்கெடுப்பு நடந்த போதும், ஸி. ஆர். சட்டசபையிலிருந்து அவருக்குப் பார்லிமெண்டரி முறைகளில் பழக்கமில்லாததைத்தான் எடுத்துக் காட்டுகிறது. இங்கிலாந்தில் பார்லிமெண்ட் மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்பட்ட போது, எதிர்க் கட்சித் தலைவர் வின்ஸ்டன் சர்ச்சிலும் அமைச்சர் பால்ட்வினும் அறையை விட்டு வெளியேறி விட்டார்கள். அதுதான் அரசியல் பண்பு. ஆனால் இங்கு நடந்தது என்ன என்பது உங்களுக்குத் தெரியும்.

இதிலிருந்து நமக்குத் தெரியவருவதென்னவென்றால், நிர்வாகம், நீதித் துறையில் தலையிடுகிறது என்பதுதான்.

மற்றும், ஜனநாயகம் பேசும் ஸி. ஆர்., சட்டப்படி நாம் பதவிக்கு வந்த ஆளும் கட்சிகளுக்குத்தான், தேர்தல் மூலம் தமது தகுதியைப் பொதுமக்களிடம் உணர்த்தியிருக்க வேண்டும்.

ஆனால், இதுவரை ஓராண்டுக்கு மேலாகியும் அவர் அந்நாகரிக நயத்துடன் நடந்துகொள்ளவில்லை. இப்பேர்ப்பட்டவர் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவதுதான் விந்தையாக இருக்கிறது.

அதைவிட வேடிக்கை என்னவென்றால், இம்மாதிரியான பேர்வழிகள் எல்லாம் ஜனநாயகம் என்று பெரும் சப்தமிட்டுக் கொண்டிருப்பது இன்னும் கேலிக்கூத்தாயிருக்கிறது.

வாக்காளர்கள் எல்லாம் இறந்து விட்டதாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் போலும்! அந்த தேர்தலில் அப்பொதுமக்கள் தாங்கள் உயிரோடிருப்பதைத் தங்கள் செயலால் காட்டத்தான் போகிறார்கள்.

இவற்றையெல்லாம் எண்ணும்போது 37 ஆண்டுகளுக்கு முன், டாக்டர் நாயர் தோற்றுவித்த இயக்கம் இன்று மாபெரும் மக்கள் சக்தியால் வளர்ந்து வருகிறது. அதுதான் இன்றைய திராவிட முன்னேற்றக் கழகம். இதைத் தடை செய்யக் கருதுவது பகற்கனவு.

அப்படித் தடை செய்வதாயிருந்தால் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட வேண்டும். அப்பொழுது காங்கிரசும் கலைக்கப்பட்டுவிடும். சட்டசபைகளும் கலைக்கப்படும். கொடுங்கோன்மையை மக்கள் உணர்வார்கள், பின்பு பலத்த எதிர்ப்புக்கிடையே எப்படி இவர்கள் நல்லாட்சி நடத்திவிட முடியும்?

உண்மை இவ்வாறிருக்க, தோல்வி மனப்பான்மை கொண்டு, அரசியலில் கருத்து வேற்றுமையுடையவர்களை 1 பேர் எதிரிகள் என்பதும், வகுப்புவாதிகள் என்பதும் சுத்த அறிவீனம் என்று நான் கூறுகிறேன்.

இன்றைய நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசை எதிர்த்துப் பாதி வழியில நிற்கிறது; அடுத்த தேர்தலுக்குள் அவ்வியக்கம் வெற்றிப் பாதையில் பாதிக்குமேல் வந்துவிடும்.

(The Dravidian Progressive Federation now Challenging the Congress stands in the half way, but by the end of next general elections it would surely be more than half way.)

இடைக்கால மாவட்டக் கழகத் தேர்தல்

சீர்காழி, நவ. 3—

இங்கு, உள்ளாட்சி மந்திரி அமைச்சர் கோ. ராஜாராம்நாயுடு பேட்டியில் கூறியதாவது:—

"மாவட்டக் கழகங்களைக் கலைத்து, நிர்வாகத்தைத் தனி அதிகாரிகளிடம் ஒப்படைத்தபோது ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படுமென்று சர்க்கார் அறிவித்தது; ஆனால், மாவட்டக் கழகங்களை பிரித்துவிட்டு, தாலுகாக் கழகங்களை ஏற்படுத்தவென சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

"வட்டக் கழகச் சட்டம் இயற்றச் சிறிது காலம் பிடிக்கும். அதற்குள் மாவட்டக் கழகத் தேர்தல் நடைபெற வேண்டும் பெரும்பாலானவர் இதை வரவேற்கின்றனர்," என்றார்.

அனுதாபம்

மாயூரம் தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் தோழர் எஸ். குருமூர்த்தி அவர்களின் தந்தையார் நடேசத் தேவர் அவர்களின் மறைவு கேட்டு தனது ஆழ்ந்த அனுதாபத்தை மாயூரம் நகர தி. மு. கழகம் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறது.

பழிக்குப் பழியா?

சென்னை, நவ. 4—

கடந்த ஏப்ரல் மாதம் சென்னை தீவுத் மைதானத்தில் நடைபெற்ற கைத்தறி குடிசைத் தொழில் கண்காட்சியின் பொறுப்பாளர்கள், சென்னை அரசாங்கத்திடமிருந்து கடனாகப் பெற்ற, 64 டன்கள் இரும்புத் தகடுகளை இதுவரை திருப்பித் தராததால், சென்னை அரசாங்கம், போலீஸ் டெபுடி கமிஷனரிடம் மேற்கண்ட கண்காட்சி நிர்வாகிகள்மீது புகார் ஒன்றைத் தந்துள்ளதாகத் தெரிகிறது.

கண்காட்சிக்காக, மத்திய அரசாங்கம் 200 டன் இரும்புத் தகடுகளை மேற்படி கண்காட்சிக்குக் கொடுப்பதாக ஒத்துக் கொண்டதாயும், ஆனால் கொடுப்பது குறித்த காலத்தில் கிடைக்காமையினால், கண்காட்சி நிர்வாகிகள், சென்னை அரசினிடம், கடனாக 64 டன் இரும்புத் தகடுகளைப் பெற்றதாயும், மத்திய அரசாங்கத்தின் கோட்டாவான 200 டன் தகடுகள் கிடைத்தபின்னும், கடன் திருப்பித் தராமலிருந்ததாலேயே போலீசில் புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கண்காட்சியின் ஆலோசனைக் குழுத் தலைவர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, டாக்டர் கே. எஸ். கோபாலசாமி ஆகியவர்களுக்கும், கண்காட்சியாளர்களிடம் மேற்கண்ட தகடுகளை விற்றதாகச் சொல்லப்படும் அமைப்பினர் எனப்படுபவர்களுக்கும் தொடர்பு இருக்கிறதென்றும், மேற்கண்ட அமைப்பினர் அவற்றை விலைக்கு வாங்கியிருந்து விற்கப்பட்ட தகடுகளையும் அரசாங்கம் பறிமுதல் செய்துள்ளதாயும் அறியப்படுகிறது.

கொலாபா தி. மு. க. கிளைக் கழகத் துவக்கம்

பம்பாய் நவ. 2—

12—10—53ல் கூபரேஜ் திடலில், தோழர் எல். எஸ். செழியன் தலைமையில் கொலாபா தி. மு. க. கிளைக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. கே. ராமநாதன், கே. எஸ். ஜெகந்நாதன், டேவிட் அருணாசலம் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 13 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு நியமிக்கப்பட்டது. கழகக் கொள்கைகளைக் குறித்துப் பல தோழர்கள் பேசினர்.

102 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியத் தந்தி நிலையம், சர்க்காருக்குச் சொந்தமான பொது உபயோக நிலையங்களில், உலகத்திலேயே முதலாவதாகும்.

"குடியரசுத் தலைவருக்கு சம்பளத்தைக் கொட்டியளப்பதேன்?"

மாங்கிரில் பாவே கண்டனம்

மாங்கீர், நவ. 2—

இங்கு நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் ஆச்சார்யா வினோபாபாவே பேசுகையில், "மனமாற்றம் மூலம் தான் உண்மையான புரட்சி ஏற்படும். அந்த வேலையை சிந்தனையாளர்கள்தான் செய்ய முடியும்," என்றார்.

"இன்றைய சிக்கலான சமுதாய அமைப்பில், பணத்தைக் கொண்டுதான் திறமை எடைபோடப்படுகிறது. உயர்ந்த பதவியை வகிப்பதால் குடியரசின் தலைவருக்கு அதிகச் சம்பளம் தரப்படுகிறது. அவரது சேவைக்குப் பெயர் மக்களின் முதல் சேவகர்; ஆனால் அவருக்கு அதிகப்படியான சம்பளம் கொடுப்பானேன்? பெரும் சம்பளத்துடன் திறமையை இணைத்துப் பேசுவதை நான் அபத்தமாகக் கருதுகிறேன்" என்று அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

"காங்கிரஸ் சர்க்கார், நிலப்பிரபுக்களின் கைப்பொம்மை"

பொன்மலை பிரஜா—சோ. கட்சியின் கண்டனம்

பொன்மலை, நவ. 3—

1—11—53-ல், பொன்மலைப் பட்டியில், பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி (கிளை) அங்கத்தினர்கள் கூட்டத்தில், கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"ஜூரத் அருகேயுள்ள பாரதி தாலுகாவில், மேய்ச்சல் நிலத்தை சாகுபடிக்கேற்றவாறு மாற்றியமைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆயிரக்கணக்கான விவசாயிகள் சாத்வீகமான முறையில் நடத்திய போராட்டத்தில், விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு இணங்காமல், காங்கிரஸ் சர்க்கார், நிலப் பிரபுக்களின் கைப்பொம்மையாக மாறிவிட்டதென்றும், தோழர் அசோக்மேத்தா, மற்றுமுள்ள தோழர்களுக்கு 16 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், மேய்ச்சல் புல்வெளியை விவசாயத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்க, சர்க்கார், நிலப்பிரபுக்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறும்; அசோக் மேத்தா மற்றுமுள்ள தோழர்களுக்கு விதிக்கப்பட்ட சிறை தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்று பம்பாய் மாகாண சர்க்காரையும் மத்திய சர்க்காரையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது"

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ஜூபிடர் நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை, எம்.ஏ.